முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 279/2021

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கிருஷ்ணசாமி | கிராமம் | : பொவி காலனி |
| வயது | : 56 | தாலூக்கா | : |
| நாள் | : 03-03-2026 | மாநிலம் | : கர்நாடகா |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நானும் பாஸ்கரனும் சேர்ந்து தான் சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்தோம் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் கிரயம் பெற்ற இடத்திலும் முத்துரத்தினத்திடம் பெற்ற இடத்திலும் கோவில் கட்டி உள்ளார் என்றால் சரிதான். கோவில் கட்டும்போதே மேல்புறம் உள்ளவர்கள் காம்பவுண்ட் சுவர் வைத்திருந்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்கண்ட விவரங்களை முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

2. நான் தாவா தாக்கல் செய்வதற்கு 3 வருடத்திற்கு முன்பே கோவில் கட்டி விட்டார்களா என்றால் அரைகுறையாக கட்டி இருந்தார்கள். கோவிலுக்குள் கருப்பராயன் கோவில் விநாயகர் கோவில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி கோவில் கட்டிய இடம் அவருக்கு இனாமாக கொடுக்கப்பட்ட இடமும் அவர் கிரயம் பெற்ற இடமும் என்றால் என் இடத்தையும் சேர்த்து தான் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்.

3. நான் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே கோவில் கும்பாபிசேகம் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் கோவில் கும்பாபிசேகம் நடந்த விவரம் தெரிந்து தான் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் கிரயம் பெற்ற இடத்தில்

தான் கோவில் கட்டி உள்ளார் எந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 222 சதுரடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்று சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

4. எனக்கு இடம் பாத்தியப்பட்டது என்றால் கோவிலுக்கு மேல்புறம் தான் இருக்கவேண்டும், கோவிலுக்குள் ஆக்கிரமிப்பு இடம் வராது என்றால் சரியல்ல. பிரதிவாதி கடந்த 2019ம் ஆண்டிலேயே கோவிலை கட்டி, கும்பாபிசேகம் செய்து விட்டார் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்து எந்த காலையில் உள்ளது என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். நான் கிரயம் பெற்ற லே அவுட்டில் எத்தனை மனையிடங்கள் உள்ளது என்றால் 31ம் எண் சைட்டாக போட்டு அதை 6 இடமாக பிரித்துள்ளார்கள்.

5. 31ம் எண் சைட்டாக போட்டு அதை 6 இடமாக பிரித்துள்ளார்கள் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. தேவைப்பட்டால் ஆவணம் தாக்கல் செய்கிறேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.03.03 13:22:46 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.